بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ

**ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத் தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் 08/10/2021 அன்று U.K - இஸ்லாமாபாதிலுள்ள முபாரக் பள்ளிவாசலில் ஆற்றிய ஜுமுஆ பேருரையின் சுருக்கம்**

**ஹஸ்ரத் உமர் பின் கத்தாப் (ரலி) அவர்களைப் பற்றிய நற்குறிப்பு**

أَشْهَدُ أَنْ لَّا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ۔ أَمَّا بَعْدُ فَأَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ۔

بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ ۝۱ اَلۡحَمۡدُ لِلّٰہِ رَبِّ الۡعٰلَمِیۡنَ ۝۲ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ ۝۳ مٰلِکِ یَوۡمِ الدِّیۡنِ ۝۴ اِیَّاکَ نَعۡبُدُ وَ اِیَّاکَ نَسۡتَعِیۡنُ ۝۵

اِہۡدِنَا الصِّرَاطَ الۡمُسۡتَقِیۡمَ ۝۶ صِرَاطَ الَّذِیۡنَ اَنۡعَمۡتَ عَلَیۡہِمۡ ۬ۙ غَیۡرِ الۡمَغۡضُوۡبِ عَلَیۡہِمۡ وَ لَا الضَّآلِّیۡنَ ۝۷

ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களது கால கட்டத்தில் கிடைத்த வெற்றிகளைக் குறித்து கூறப்பட்டு வந்தது. அல்லாமா ஷிப்லீ நுஃமானீ அவர்கள் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் வெற்றிகள் மற்றும் அதற்கான காரண காரணிகள் குறித்து எடுத்துரைத்தவாறு கூறுகிறார்கள்: ஒரு வரலாற்றாசிரியரின் உள்ளத்தில் உடனே எழக்கூடிய கேள்வி என்னவென்றால் சில பாலைவனவாசிகள், பாரசீகம் மற்றும் ரோமானிய தேசங்களின் ஆட்சிப் பீடத்தை ஏன் புரட்டிப் போட்டார்கள்? இது உலக வரலாற்றில் விதிவிலக்கான சம்பவமாக இருந்ததா என்ன? இந்த வெற்றிகளை அலெக்ஸாண்டர் மற்றும் செங்கிஸ்கான் ஆகியோரின் வெற்றிகளோடு ஒப்பீடு செய்ய முடியுமா என்ன?

ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் குறிப்பாக வென்ற நாடுகளின் மொத்த பரப்பளவு **22,51,030** சதுர மைல் ஆக இருந்தது. அந்த வெற்றிகளைக் குறித்து ஐரோப்பிய வரலாற்றாசிரியர்களின் கருத்து என்னவென்றால், “அக்காலத்தில் பாரசீகம் மற்றும் ரோமானிய தேசத்தின் ஆட்சிகள் உச்சியில் இருந்து வீழ்ந்து விட்டன. குஸ்ரூ பர்வேஸுக்குப் பிறகு பாரசீகத்தின் ஆட்சி அமைப்பு முற்றிலும் சீர்குலைந்து விட்டது. நவ்ஷேர்வானுக்கு சில காலம் முன்பு மார்க்கமற்ற, இறை மறுப்பு பிரிவான மஸ்தகிஸத்தின் ஆதிக்கம் அதிகமானது. அவர்களைப் பொறுத்தவரையில், பேராசையை நீக்குவதற்கு பெண்கள் உட்பட அனைத்து உடமைகளையும் பொது சொத்தாக ஆக்கி வந்தார்கள். அதேபோன்று கிறிஸ்தவ நெஸ்தோரியர்களுக்கும் எந்த ஆட்சியிலும் புகலிடம் கிடைக்கவில்லை. முஸ்லிம்கள் (எந்தவொரு) மார்க்க கொள்கையையும் தடை செய்வதில்லை. ஆகவே நீண்ட காலமாக அடக்கு முறைக்கு ஆளாகி வந்த இந்த இரு பிரிவுகளும் இஸ்லாத்தின் நிழலில் வந்து எதிரிகளின் அநீதியிலிருந்து தப்பி விட்டன.”

ரோமானிய பேரரசு தொடர்பாக ஐரோப்பிய வரலாற்றாசிரியர்களின் கருத்து என்னவென்றால், “கிறிஸ்தவத்திற்குள் பரஸ்பர கருத்து வேறுபாடு அந்நாட்களில் மேலோங்கியிருந்தது. மேலும் பேரரசு பலவீனமாகி இருந்தது.”

அல்லாமா ஷிப்லீ அவர்கள் இக்கருத்தை மறுத்தவாறு கூறுகிறார்கள்: சந்தேகத்திற்கிடமின்றி அக்காலத்தில் பாரசீகம் மற்றும் ரோமானிய பேரரசுகள் உச்சத்தில் இருக்கவில்லைதான்! ஆனால் அரேபியா போன்ற உபகரணங்களற்ற சமுதாயத்துடன் மோதி தூள் தூளாகும் அளவுக்கு அவைகள் பலவீனமாக இருக்கவில்லை. ரோமானிய தேசமும் பாரசீகமும் போர் கலையில் நிபுணத்துவம் பெற்றிருந்தார்கள். மிகுதியான போர் தளவாடங்களும் இருந்தன. அவர்கள் தம்

கோட்டைகளிலும் தம் பதுங்குமிடங்களிலும் இருந்து கொண்டு நாட்டை பாதுகாக்க வேண்டியிருந்தது (மட்டுமேயாகும்!).

இன்னொரு புறம், அரேபியர்களின் மொத்த படையினரின் எண்ணிக்கை ஒரு லட்சத்தை விடவும் குறைவாகவே இருந்தது. அவர்களும் எவ்வாறானவர்களாக இருந்தார்கள் என்றால், அடிப்படை போர் கருவிகள் கூட அவர்களிடம் இருக்கவில்லை; நவீன போர் யுக்திகளை அறியாதவர்களாக இருந்தார்கள். ஆகவே இக்கேள்வியின் உண்மையான பதில் என்னவென்றால், இஸ்லாத்தின் தூதர் (ஸல்) அவர்களின் காரணமாக அப்போது முஸ்லிம்களிடத்தில் உத்வேகம், உறுதி, நிலையான தன்மை, துணிச்சல் மிகுதி, தைரியம் ஆகியவை உருவாகிவிட்டது. ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் இப்பண்புகளை இன்னும் மெருகேற்றி விட்டார்கள். முஸ்லிம்களின் நீதியும் நேர்மையும், ஆட்சி அமைப்பதில் அவர்களுக்கு உதவி செய்தன. அதன் காரணமாகவே பொது மக்கள் ஒருபோதும் எதிர்ப்பு தெரிவிக்கவில்லை. ஈராக் மற்றும் சிரியா ஆகிய நாடுகளின் தலைவர்களும் ஆட்சியாளர்களும் இந்த நல்லொழுக்கங்களைக் கண்டுதான் முஸ்லிம்களாக மாறினர். ஆகவே (ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களோடு ஒப்பீடு செய்யும் விதமாக) அலெக்ஸாண்டர் மற்றும் செங்கிஸ்கான் ஆகியோரின் பெயர்களை இங்கு கூறுவது பொருத்தமற்றதாகும். அவர்கள் கடுமை, அநீதி மற்றும் பொது படுகொலைகள் ஆகியவற்றின் மூலமாக பெரும் பெரும் வெற்றிகளை பெற்றனர். ஆனால் முஸ்லிம்களோ உண்மை, மென்மை மற்றும் நேர்மை ஆகியவற்றின் மூலமாக பொதுமக்களின் உள்ளங்களை வென்றார்கள். செங்கிஸ்கான், நெபுகாத் நசர், தைமூர், நாதிர் ஷாஹ் போன்ற அனைவரும் கொடுங்கோலர்களாக இருந்தனர். ஆனால் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் வெற்றிகளில், ஒருபோதும் சட்டத்தையோ நீதியையோ மீறவில்லை. (போர்களின் போது) உடல்களை சிதைத்தல், குழந்தைகளை கொலை செய்தல், ஒப்பந்தங்களை முறித்தல், பொது மக்களை பொது படுகொலை செய்தல் ஆகிய செயல்களை செய்வது ஒருபுறம் இருக்கட்டும்; ஒரு மரத்தை வெட்டக்கூட அனுமதி இருக்கவில்லை.

எவர்களெல்லாம் உமர் ஃபாரூக் அவர்களின் வியத்தகு வெற்றிகளைப் பற்றி குறிப்பிடும்போது, இதுபோன்ற வெற்றியாளர்கள் உலகில் இருந்திருக்கிறார்கள் என பதிலளிக்கிறார்களோ அவர்கள் நிரூபிக்க வேண்டியது என்னவென்றால், இதுபோன்ற கட்டுப்பாடுகள், வரைமுறைகள், மன்னிக்கும் குணம் ஆகியவற்றுடன் ஒரு ஜான் அளவு அந்நிய நிலத்தை வென்ற ஏதேனும் ஒரு ஆட்சியாளரை காட்ட வேண்டும். அலெக்ஸாண்டர் மற்றும் செங்கிஸ்கான் ஆகியோர் தாமே போரில் பங்கெடுத்தனர். ஆனால் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களோ தமது கிலாஃபத் கால கட்டத்தில் ஒரு முறை கூட எந்தவொரு போரிலும் பங்கெடுக்கவில்லை. ஆயினும் அனைத்து படைகளின் கடிவாளம் அன்னாரின் கையில் இருந்தது. அலெக்ஸாண்டர் போன்றோரின் வெற்றிகள் மேகத்தைப் போன்று இருந்தது. அது ஒருமுறை வலுவாக வந்து கடந்து சென்று விட்டது. ஆனால் உமர் ஃபாரூக் அவர்களின் வெற்றிகளில் காணப்படும் உறுதித்தன்மை என்னவென்றால், **1300** ஆண்டுகள் கழிந்த பின்னரும் வெற்றி கொள்ளப்பட்ட அந்நாடுகள் இஸ்லாத்தின் அதிகாரத்திற்குள் இருக்கிறது.

‘‘அந்த வெற்றிகளில் அக்காலத்து (முஸ்லிம்களிடத்தில்) காணப்பட்ட உத்வேகம் மற்றும் திட உறுதி ஆகியவற்றுக்கு எந்த அளவு பெரும் பங்கு இருந்ததோ அந்த அளவுக்கு கலீஃபாவின் பங்கு இருக்கவில்லை’’ என்று ஒரு பொதுவான கருத்து கூறப்படுகிறது. இதைக்குறித்து அல்லாமா ஷிப்லீ எழுதுகிறார்கள்: ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) மற்றும் ஹஸ்ரத் அலீ (ரலி) ஆகியோரின் காலத்திலும் அதே முஸ்லிம்கள்தான் இருந்தார்கள். ஆனால் என்ன விளைவு ஏற்பட்டது? உத்வேகமும் தாக்கமும் சந்தேகத்திற்கிடமின்றி மின் சக்திகளைப் போன்றதாகும். ஆனால் இவை எப்போது

பயனளிக்கும் என்றால், வேலை வாங்கக்கூடியவரும் அதே வேகமும் ஆற்றலும் கொண்டவராக இருக்க வேண்டும். உமர் ஃபாரூக் அவர்களுடைய வெற்றிகளின் சூழ்நிலைகள் தெளிவாக கூறுவதென்னவென்றால், அனைத்து படைகளும் கைப்பாவையைப் போன்று ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் சைகைக்கு இயங்கிக் கொண்டிருந்தன. படையின் வரிசையமைப்பு, இராணுவ பயிற்சி, வீரர்களை நியமிப்பது, குதிரைகளை பராமரிப்பது, கோட்டைகளை பராமரிப்பது, தட்ப வெட்ப சூழ்நிலைக்கேற்ப பயணம் செய்தல், கடிதப் போக்குவரத்து, படைத்தளபதிகளை தேர்ந்தெடுத்தல், கோட்டைகளை தகர்க்கக் கூடிய உபகரணங்களை பயன்படுத்துவது போன்ற பல்வேறு நடவடிக்கைகளை ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் தாமே கண்டறிந்தார்கள். அவற்றை ஆற்றலுடனும் வலிமையுடனும் நிலை பெறச் செய்தார்கள். அந்த 10 வருட காலகட்டத்திற்குள் நடந்த அப்போர்களில் மிகவும் அபாயகரமான இரு சந்தர்ப்பங்கள் வந்தன. ஒன்று, நஹாவந் போர். இரண்டாவது, ரோமானிய கைஸர் ஜஸீராவாசிகளுக்கு உதவி செய்வதற்காக ஹோம்ஸ் நகரத்தின் மீது படையெடுப்பு செய்ததாகும். அவ்விரு போர்களிலும் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் அழகிய திட்டமிடல்தான் மேலெழும்பிய புயலை அடங்கச் செய்தது. வெற்றிகள் மற்றும் நீதி ஆகிய இரண்டையும் ஒருங்கே கொண்ட - ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களுக்கு இணையான எந்த ஒரு வெற்றியாளரும், உலகை வென்றவரும் இன்றுவரை (இவ்வுலகில்) பிறந்ததில்லை.

**ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஒரு சந்தர்ப்பத்தில் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களுக்காக துஆ செய்தவாறு,** புதிய உடைகளை அணியுங்கள்; புகழத்தக்க வாழ்க்கை வாழுங்கள்; ஷஹீதுகளின் மரணத்தை அடையுங்கள் என்றார்கள்.

ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி), ஹஸ்ரத் உமர் (ரலி), ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) ஆகியோருடன் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் உஹது மலை மீது ஏறியபோது அது குலுங்கத் தொடங்கியது. அப்போது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், உஹதே! பொறுத்திரு. உன் மீது ஒரு நபி, ஒரு சித்தீக் மற்றும் இரு ஷஹீதுகள் உள்ளனர் என்று கூறினார்கள். இன்னொரு சந்தர்ப்பத்தில் **ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், இஸ்லாமிய உலகம் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் மரணத்தின் போது அழும் என ஹஸ்ரத் ஜிப்ரீல் (அலை) அவர்கள் என்னிடம் கூறினார்கள் என்றார்கள்.** உம்முல் முஃமினீன் ஹஸ்ரத் ஹஃப்ஸா (ரலி) அறிவிக்கிறார்கள். அவர்களின் தந்தை ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள், அல்லாஹ்வே! உன் வழியில் எனக்கு ஷஹாதத்தை வழங்குவாயாக என துஆ செய்து வந்தார்கள்.

**ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்ஊது (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்:** மதீனாவில் தமக்கு ஷஹாதத் கிடைக்க வேண்டும் என ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் துஆ செய்து வந்தார்கள். எதிரி மதீனா மீது படையெடுக்க வேண்டும்; மதீனாவின் வீதிகளில் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களை ஷஹீதாக்க வேண்டும் என்ற அளவுக்கு இந்த துஆ அபாயகரமானதாக இருந்தது. ஆனால் இறைவன் இந்த துஆவை இன்னொரு வகையில் ஏற்றுக் கொண்டான். முஸ்லிம் என்று அழைக்கப்பட்ட ஒருவனின் கைகளாலேயே மதீனாவில் அன்னார் ஷஹீதாக்கப்பட்டார்கள்.

ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் ஷஹாதத் தொடர்பாக ஹஸ்ரத் அபூ மூஸா அஷ்அரீ (ரலி) மற்றும் ஹஸ்ரத் அவ்ஃப் பின் மாலிக் (ரலி) ஆகியோர் கனவுகள் கண்டனர். அதேபோன்று ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களே தம் ஷஹாதத் தொடர்பாக ஒரு (ஆன்மீக) காட்சியை கண்டார்கள். ஹிஜ்ரி 23 ஆம் ஆண்டில் துல் ஹஜ்ஜா 26 ஆம் நாளில் அன்னார் தாக்கப்பட்டார்கள். ஹிஜ்ரி 24 ஆம் ஆண்டில் முஹர்ரம் ஒன்றாம் நாளில் அன்னாரின் ஷஹாதத் நிகழ்ந்தது. அதே நாளன்று அன்னாரின் நல்லடக்கம் நடந்தது.

புகாரியில் எடுத்துரைக்கப்பட்ட ஷஹாதத் சம்பவத்தின் விளக்கத்திற்கேற்ப, ஃபஜ்ர் தொழுகையின் போது முகைராவின் அரபியல்லாத ஓர் அடிமை இரு புறமும் கூர் தீட்டப்பட்ட ஒரு கத்தியினால் அன்னாரின் மீது தாக்குதல் தொடுத்தான். அம்மனிதன் தன்னைக் காப்பாற்றிக் கொள்வதற்காக இன்னும் 13 நபர்களின் மீது தாக்குதல் தொடுத்தான். தாக்குதலுக்காளானவர்களில் 7 நபர்கள் உயிரிழந்து விட்டனர். காயமடைந்தபோது ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள், ஹஸ்ரத் அப்துர் ரஹ்மான் பின் அவ்ஃப் (ரலி) அவர்களை (தொழுகையில்) இமாமத் செய்வதற்காக முன்னிறுத்தினார்கள். அவர்கள் மக்களுக்கு சுருக்கமாகத் தொழ வைத்தார்கள். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள், பள்ளிவாசலிலிருந்து சுமந்து வீட்டுக்கு கொண்டு செல்லப்பட்டார்கள். முதலில் அன்னாருக்கு பேரீத்தம் பழச்சாறும் பின்னர் பாலும் அருந்தக் கொடுக்கப்பட்டது. அவை காயத்தின் வழியே வெளியேறின. அன்னார் உயிர் பிழைக்க இயலாது என மக்கள் உணர்த்து கொண்டனர். ஓர் இளைஞர் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் சிறப்புகளை எடுத்துரைத்தபோது அன்னார், இவையெல்லாம் எனக்கு சாதகமாகவும் வேண்டாம்; பாதகமாகவும் வேண்டாம். சரிக்கு சமமாக இருப்பதையே நான் விரும்புகிறேன் என்றார்கள்.

ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள், ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் உமர் (ரலி) அவர்களிடம் (தாம் கொடுக்க வேண்டிய) தமது கடனை கணக்கிடச் செய்த போது, அது ஏறக்குறைய 86 ஆயிரம் திர்ஹம்களாக இருந்தது. அதை செலுத்துவது தொடர்பாக அன்னார் வழிகாட்டினார்கள். பிறகு ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் உமர் (ரலி) அவர்களை ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்களிடத்தில் அனுப்பி வைத்தார்கள். உம்முல் முஃமினீன் ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்களிடம் சென்று, உமர் பின் கத்தாப் தமது இரு தோழர்களுடன் அடக்கம் செய்யப்பட உங்களிடம் அனுமதி கோருகிறார் எனக்கூறுங்கள் என அனுப்பி வைத்தார்கள். ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் உமர் (ரலி) அவர்கள், ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்களிடத்தில் சென்ற போது அவர்கள் அழுது கொண்டிருந்தார்கள். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் செய்தியை கேட்ட பிறகு, நான் இந்த இடத்தை எனக்காக வைத்திருந்தேன். ஆனால் இன்று நான் என்னைவிட ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களுக்கே முதலிடம் அளிப்பேன் என்று ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் கூறினார்கள். ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்களின் அனுமதி கிடைத்த தகவலைக் கேட்ட ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள், அல்ஹம்துலில்லாஹ்! இதைவிட அதிகமாக எனக்கு எதைப்பற்றியும் கவலை இருக்கவில்லை எனக் கூறினார்கள்.

கிலாஃபத்தை தேர்ந்தெடுப்பதற்காக ஹஸ்ரத் அலீ (ரலி), ஹஸ்ரத் உஸ்மான் (ரலி), ஹஸ்ரத் ஸுபைர் (ரலி), ஹஸ்ரத் தல்ஹா (ரலி), ஹஸ்ரத் சஅது (ரலி), ஹஸ்ரத் அப்துர் ரஹ்மான் பின் அவ்ஃப் (ரலி) ஆகியோரை ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் நியமித்தார்கள். மேலும், முஹாஜிரீன், அன்ஸார், காட்டரபிகள் மற்றும் தேவையுடையோர் ஆகியோரிடம் நல்ல முறையில் நடந்து கொள்ளுமாறு அடுத்து தேர்ந்தெடுக்கப்படும் கலீஃபாவுக்கு இறுதி உபதேசம் செய்தார்கள்.

*ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் நற்குறிப்பு தொடரும் என்று கூறியவாறு ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்:* இன்று ஜெர்மனியின் மாநாடு துவங்குகிறது. இது இரு நாள்களைக் கொண்ட மாநாடு ஆகும். நாளை இறுதி அமர்வில் நான் சொற்பொழிவாற்றுவேன் இன்ஷா அல்லாஹ்! அல்லாஹ் இந்த மாநாட்டை அருளுக்குரியதாக ஆக்குவானாக.

*குத்பாவின் இறுதியில் ஹுஸூர் அவர்கள், இந்தோனேஷியாவின் முபல்லிக் மதிப்பிற்குரிய கமருத்தீன் சாஹிப் மற்றும் சுல்தான் ஹாரூன் கான் சாஹிபின் மனைவியாகிய மதிப்பிற்குரிய சபீஹா ஹாரூன் சாஹிபா ஆகிய இரு மர்ஹூம்களின் நற்குறிப்பை எடுத்துரைத்து ஜனாஸா காயிப் தொழ வைப்பதாக அறிவித்தார்கள்.*

(தமிழாக்கம்: மவ்லவி A.P.A. தாரிக் அஹமது)